முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1410

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.08.2023, புதன்கிழமை

(சோபகிருது வருடம் ஆடி மாதம் 24 ம் நாள்)

1. வரம் தரும் ஞான வள்ளலே
வையகம் காத்திடும் அண்ணலே
தரமான தொண்டர்படைகள் கொண்டு
தரணிகாக்க அவதரித்த எந்தன் அவதாரமே
2. அவதார ஞானியே அரங்கனே
ஆறுமுகன் யான் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
அவனியிலே சோபகிருது நள்ளி திங்கள்
அரங்கனுக்கு சக்தி பெருக எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே மாதவசி நீயப்பா
உண்மை நிறைந்த மாதர்மவானும் நீயப்பா
குறைவின்றி உன் திருவடி பற்றி
குவலயத்தார் அறம் தர்மபணிகள் செய்தால்
4. செய்தவர்க்கு ஞானம் சித்திக்கும்
சேவையென உன் வழி தொடர்ந்து வருபவர்க்கு
மெய்ஞானம் இனி பிறவாத பேறு
மேன்மைநிலை தானாய் வந்தடையும்
5. அடையவே அரங்கன் உன்னுள் ஆறுமுகன் யான்
ஆற்றல்பட இருந்து இயக்கி வர
வரமென உன் கட்டளைகள் அத்தனையும்
வையகத்தை நல்வழி காட்டி காத்தருளும்
6. அறமான ஞானவான்களை படைத்து
அகிலத்தில் தனிப்பெரும் ஞான ஆட்சிதனை அமைத்தருளும்
அருளவே அரங்கனே உமக்கு நித்தம்நித்தம்
ஆற்றல் கூட்டி ஆறுமுகன் யான்

7. வரமாக சக்தியும் வையகத்தை மீட்கும் உயர்பலமும்
வழங்கி ஆறுமுகன் யான் காத்து வர
வருகவே உன்னை சரணடைந்தவர்க்கு
வையகத்தில் பிறவாத பேறு உறுதிஉறுதி
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–